## 10

# வாழ்வின் சரியான பக்கத்தை மேலாகத் திருப்புதல்

## [பிரங்கி 7; 8]

*வாழ்வின் முன்னுரிமைகள் பற்றி மக்கள் எவ்வளவாகக் குழப்பம் அடைந்து இருக்கின்றனர் என்பது பற்றி விவரிப்பதற்குப் பிரசங்கி 7 மற்றும் 8ம் அதிகாரங்களில் பல நேர்மாறுகள் தரவழைக்கப்பட்டுள்ளன. மிகச் சிறந்தது என்று நாம் நினைக்கும் தெரிவுகள் எப்போதுமே மிகச் சிறந்தவைகளாக இருப்பது இல்லை. நாம் வாழ்வைத் தலைகீழாகக் கண்ணோக்கிக் கொண்டிருக்கின்றோம், இருப்பினும் அது சரியானதாக உள்ளது என்று நினைக்கின்றோம். தேவனில்லாத நிலையில் மனிதன் தலைகீழாகத் திருப்பப்பட்ட வாழ்வைக் கொண்டுள்ளான், அதை உணர்ந்தறியாமலும் இருக்கின்றான். பவுலும் அவரது உடன் ஊழியர்களும் தெசலோனிக்கே பட்டணத்திற்குச் சென்றபோது, அவர்கள் உலகத்தைக் கலக்குகின்றவர்கள் என்று அந்த நகரில் இருந்த சில மனிதர்கள், குற்றம் சாட்டினார்கள் (அப். 17:6). உண்மையில் உலகம் ஏற்கனவே தலைகீழான நிலையில் இருந்தது, கிறிஸ்தவர்கள் சரியான பக்கத்தை மேலாகத் திருப்ப நாடிக்கொன்டிருந்தனர்.*

*வாழ்வின் மேன்மையான விஷயம் என்று சாலொமோன் விவரித்ததை, சராசரி நபர் மேன்மையானதென்று கருதமாட்டார். மேன்மையானவை என்று சாலொமோன் கருதிய சில அனுபவங்கள் சந்தோஷமற்றவைகளாக இருப்பதால் அவைகள் நாம் தவிர்க்க விரும்புகின்ற அனுபவங்களாக உள்ளன.*

### சூழ்நிலைகளை அவைகள் இருக்கும் வண்ணமாகக் காணுங்கள் (7:1-7)

*முதலாவதாக, நற்கீர்த்தியானது பரிமளத் தைலங்களைத் காட்டிலும் மேன்மையானது என்று சாலொமோன் கூறினார். வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில், விலை உயர்ந்த பரிமளத் தைலங்கள் பொக்கிஷமாக நினைக்கப்பட்டன. மரியாள் இயேசுவின் பாதங்களை அபிஷேகம் செய்வதற்கு விலையுயர்ந்த பரிமளத் தைலத்தைப் பயன்படுத்தியபோது யூதாஸ் காரியோத்து கலக்கம் அடைந்தான். அதை முந்நூறு பணத்திற்கு விற்று தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்று அவன் உடனடியாகக் கருத்துத்*

தெரிவித்தான். யூதாஸ் தரித்திரரைக் குறித்து அக்கறை கொண்டிருக்க வில்லை; அவன் அந்தக் குழுவில் பொருளாளராக இருந்தான் மற்றும் அந்தப் பணம் அவனுடைய பணப்பையில் இருக்க வேண்டும் என்று விரும்பினான் (யோவா. 12:1-6). நீதிமொழிகள் 22:1, "திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்துகொள்ளப்படத்தக்கது: பொன் வெள்ளியைப்பார்க்கிலும் தயையே நலம்" என்று கூறுகிறது. "யூதாஸ்" என்ற பெயரானது எப்போதுமே இகழ்ச்சிக்கு உரியதாக வைக்கப்படும், ஏனெனில் அவன் தனது சிந்தையில் வாழ்வைத் தலைகீழாகக் கொண்டிருந்தான். அவன் சரியான முன்னுரிமைகளைக் கொண்டிருந்ததில்லை.

இரண்டாவதாக, மரண நாள் என்பது ஜனன நாளை விட மேன்மை யானதாக உள்ளது என்று சாலொமோன் கூறினார். இந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய நேரெதிரான கருத்துக்களை நாம் கொண்டிருப்போம் என்பது உறுதி. ஒரு குழந்தை பிறக்கும்போது நாம் மகிழ்வடைகின்றோம், அன் பார்ந்த ஒருவர் மரிக்கும் போது நாம் அழுகின்றோம். நாம் "மரண நாட்களை" அல்ல ஆனால் பிறந்தநாட்களையே கொண்டாடுகின்றோம். சாலொமோனைப் பொறுத்தமட்டில், ஒரு குழந்தை பிறக்கின்றபோது நாம் அழ வேண்டும், மற்றும் மகிமைக்கென்று அது ஏறெடுத்துக் கொள்ளப் படுகையில் நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்.

மூன்றாவதாக, ஒரு விருந்திற்குச் செல்லுவதைக் காட்டிலும் ஒரு சவ அடக்கத்திற்குச் செல்லுதல் என்பது மேன்மையானதாக உள்ளது. ஏன்? விருந்து ஒன்றில், சிரிப்பதும் வயிறு நிறைய உண்பதுமான மீண்டும் வெறுமையாகும் விஷயங்களின் சுருக்கமான மகிழ்ச்சியைப் பெறுதல் என்ற கொஞ்சமான ஆதாயமே உள்ளது. இதற்கு மறுபுறம், புலம்புதல் என்பது இருதயத்தின் முதிர்நிலைகள் பற்றித் தீவிரமாகச் சிந்தித்துபார்க்க வழிநடத்துகிறது.

நான்காவதாக, மூடரின் பாட்டைக் கேட்பதைக் காட்டிலும் ஞானி யின் கடிந்து கொள்ளுதலைக் கவனித்தல் என்பது மேன்மையானதாக உள்ளது. இளம் வயது மக்கள் திருத்தப்படுதலைப் பெரும்பாலும் தவிர்த்து, ஒலி மிகுந்த இசையின் லயத்தில் தங்களை இழந்து போகின்றனர். சோம் பேறித்தனமான மகிழ்வை அனுபவித்தல் என்பது பயனற்றதாக உள்ளது, சிரிப்பு என்பது பானைக்கு அடியில் வைக்கப்பட்ட தீயில் இடப்பட்ட உலர்ந்த முடிகளைப்போல் படபடப்பதாக உள்ளது.

"இதைக் காட்டிலும் அது மேன்மையானது" என்பது பற்றிய இந்தப் பட்டியலானது, நாம் நமது முன்னுரிமைகளை நேராக்கிக் கொள்ளாத வரையில் வாழ்வு என்பது அது இருக்க வேண்டிய பிரகாரம் இராது என்பதை விவரிக்கிறது.

## முடிவு விளைவை ஆழ்ந்து சிந்தியுங்கள் (7:8-14)

விளையாட்டு வீரருக்கு, பயிற்சி என்பது முன்னுரிமையான விஷயமாக உள்ளது. அவர் வேதனை மற்றும் உழைப்பு ஆகியவற்றை மகிழ்வுடன் அனு பவிக்கின்ற காரணத்தினால் மாத்திரம் வியர்த்தல், கடின உழைப்பு மற்றும்

தசைகளில் வலி ஆகியவற்றைப் பெறுவதில்லை. அவர் கடைசிப் பந்தயத்தையும் ஓட்டத்தை முடிப்பதையும் எதிர்நோக்கியிருக்கின்றார். குறிப்பிட்ட ஒரு கணத்தில் நமக்கு நடைபெறுவதென்பது அல்ல ஆனால் முடிவில் அது எவ்வாறு திரும்புகிறது என்பதே அர்த்தத்தைத் தீர்மானிக்கிறது. "ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது" (7:8அ).

7:8ஆ-10ல் நாம், பெருமையுடன் இருப்பதைப் பார்க்கிலும் பொறுமையுடன் இருத்தல் மேன்மையானது என்று வாசிக்கின்றோம்:

> பெருமையுள்ளவனைப்பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன். உன் மனதில் சீக்கிரமாய்க் கோபங்கொள்ளாதே, மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும். "இந்நாட்களைப்பார்க்கிலும் முன்நாட்கள் நலமாயிருந்தது?" என்று சொல்லாதே, நீ இதைக்குறித்துக் கேட்பது ஞானமல்ல.

பொறுமையின்மை என்பது துரிதமாய் உணர்ச்சிவசப்படுதலுக்கு வழிநடத்துகிறது. துரிதமாய்க் கோபப்படுதல் என்பது பயனற்றதாக உள்ளது மட்டுமின்றி, பொறுமையின்மை என்பது நமது வாழ்வைப் புறம்பே தள்ள விரும்பவும் காரணமாகிறது. அதுவும்கூட மதியீனமானதாக உள்ளது. நாம் இளைஞர்களாக இருக்கும்போது, வளருவதற்கும் வாழ்வைப் புரிந்து கொள்ளுவதற்கும் பொறுமையற்றவர்களாக இருக்கின்றோம். நாம் முதியவர்களாக இருக்கும்போது, மீண்டும் இளைஞர்களாக இருக்க விரும்புகின்றோம். இப்படிப்பட்ட விருப்பங்கள் சுழற்காற்றைத் துரத்துவது போன்றதாக உள்ளன. சாலொமோன் உண்மையில், நாம் வாழ்வில் நமது பங்கை ஏற்றுக்கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றே கூறினார்.

சுதந்தரத்தைப் பயன்படுத்துவதில் ஞானத்தைச் செயல்முறைப் படுத்துதல் நல்லது என்றும் சாலொமோன் கூறினார் (7:11-14). பணமும் ஞானமும் தங்கள் அனுகூலங்களைக் கொண்டுள்ளன, ஆனால் ஞானம் என்பது பணத்தைக் கொண்டிருத்தலுக்கு நோக்கத்தைத் தருகிறது. இவ்விரண்டையும் கொண்டுள்ளவர்கள் இவற்றிலிருந்து பயன் அடைவார்கள். ஞானம் இல்லாமல் செல்வம் மட்டும் கொண்டிருத்தல் என்பது துரதிர்ஷ்ட வசமானதாக உள்ளது. நாம் தேவனுடைய வழிகளை ஆழ்ந்து சிந்திக்கும் போது விஷயங்கள் பற்றிய தேவனுடைய திட்டங்களை நாம் மாற்ற முடியாது என்பதை விரைவிலேயே உணர்ந்து அறிகின்றோம். அவர் கோணலாக்கியதை நாம் நேராக்க இயலாது; வாழ்வில் நமது பங்கை ஏற்றுக்கொள்ளுதல் என்பதே செய்வதற்கு மிகச் சிறந்த விஷயமாக உள்ளது. நாம் வளமடையும்போது மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்; ஆனால் நாம் வளமடையாதபோது, தேவன் வளத்தையும் எதிரான சூழ்நிலைகளையும் நமக்கு உதவுவதற்காகவே கொண்டு வருகின்றார் என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். எதிர்காலம் நமக்கு வைத்துள்ளது என்ன என்பதை நாம் அறியாதபடியால், எதிர்காலத்தைத் தமது கரத்தில் வைத்துள்ள ஒருவர் (தேவன்) மீது நம்பிக்கையாய் இருத்தல் என்பது கருத்தறிவுள்ளதாக இருக்கிறது.

## *கடைசி எல்லைகளைத் தவிருங்கள் (7:15-22)*

*பயனற்ற பல கடைசி எல்லைகளை சாலொமோன் உற்றுக்கவனித் திருந்தார் (7:15-17). நல்லவர்களாயிருந்த இளம் மனிதர்கள் இறந்ததையும், துன்மார்க்கர் நீண்ட காலம் வாழ்ந்திருந்ததையும் அவர் கண்டிருந்தார். இவையிரண்டுமே நியாயமானதாகக் காணப்படாத இரண்டு கடைசி எல்லைகளாக இருந்தன; இவைகள், கடைசி எல்லைகளின் பயனற்ற தன்மையை விவரித்தன. அவர், "மிஞ்சின நீதிமானாக" இருத்தலுக்கு எதிராகக்கூட அறிவுரை கூறினார். அவர் அனேகமாக, மார்க்கரீதியாக வெறி யுடன் இருத்தல் என்பது ஞானமற்றதும் தேவையற்றதுமாக உள்ளது என்று அர்த்தப்படுத்தியிருக்கலாம். மேலும் அவர், அதிக ஞானியென்று காண்பித்துக் கொள்வதற்கு எதிராகவும் அறிவுரை கூறினார். மிஞ்சின துன்மார்க்கமாய் இருத்தல் என்பது விசேஷித்த வகையில் மதியீனமானதாக உள்ளது. ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி மிகுந்த தீவிரமாக இருப்பவர்கள் வழக்கமாக, வாழ்வின் தொடக்கத்திலேயே தங்களை அழித்துக் கொள்கின் றனர்.*

*வாழ்வில் நமக்கு நல்லதொரு பிடிமானம் தேவைப்படுகிறது (7:18-20). நாம் தேவன்மீது நம்பிக்கையாயிருந்து அவர்மீது பயபக்தி செலுத்தினால், எல்லாம் நல்லதாகும். இவ்வகையான ஞானமானது, நகரத்தலைவர்கள் பத்துப்பேரைக் காட்டிலும் அதிக பலம்வாய்ந்ததாக உள்ளது. ஒவ்வொரு வருக்கும் ஞானம் தேவைப்படுகிறது, ஏனென்றால் ஒவ்வொருவருமே தவறு செய்கின்றோம் - சரியானதைச் செய்ய நாம் முயற்சி செய்யும்போது கூடத் தவறு செய்கின்றோம்.*

*துன்மார்க்கமான அறிக்கைகள் குறித்து நாம் அளவுமீறிப் பதில்செயல் செய்யக்கூடாது (7:21, 22). அவைகள் நம்மைப் பற்றியவைகளாக இருப்பினும் கூட, அவைகள் நம்மைக் கவலைப் படுத்தும்படி நாம் அனுமதிக்கக் கூடாது. ஒவ்வொருவருமே, யாராவது ஒருவரால் பேசப்படுவார்கள். நம்மிடம் வேலைசெய்பவர்கள் நம்மைப் பற்றி மோசமானவைகளைக் கூறியதாக கேள்விப்பட்டாலும், அதை நாம் மிகக்கடினமானதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நாமும்கூட மற்றவர்களைக் குறித்து சிந்தித்துப்பாராது மோசமானவற்றைக் கூறிவிடுகின்றோமே. ஒருவேளை இது, நமது சொந்த வார்த்தைகளை அதிக ஜாக்கிரதையாகக் கூறுவதில் நமக்கு ஊக்க மூட்டலாம்.*

## *ஞானத்தைச் செயல்முறைப்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள் (7:23-29; 8:1)*

*வாழ்வை நேரானதாகக் காத்துக்கொள்வதற்குத் தேவனிடத்திலிருந்து வருகிற ஞானம் நமக்குத் தேவைப்படுகிறது. தேவபக்தியைப் பற்றிக் கற்றுக்கொள்வது கடினமானதாக உள்ளது, ஏனென்றால் தேவனைப் பற்றிச் சிறிதளவே சிந்திக்கின்ற உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தேவபக்தியைப் பற்றிய உண்மைகள் கற்றறியப்படும்போதுகூட, சில*

*வேளைகளில் அவைகளை நமது சொந்த வாழ்வின் சூழ்நிலைகளில் செயல் முறைப்படுத்துதல் என்பது கடினமானதாக உள்ளது.*

*சாலொமோன் ஞானியாக இருக்கத் தீர்மானித்தார், ஆனால் அவர் தமது ஞானத்தைப் பயன்படுத்தி இருக்க வேண்டிய வகையில் பயன்படுத் தாதிருந்தார் (7:23-25). ஞானம் என்பது "தொலைவில் உள்ளது மற்றும் இரகசியமானது, அதைக் கண்டறியக்கூடியவன் யார்?" என்று அவர் கூறி னார். நல்ல மற்றும் கெட்ட விஷயங்களைப் புரிந்து கொள்வதற்கான காரணங்களை அவர் முன் அமைத்தார். உலகத்தில் இவ்வளவு அதிகமான மதியீனமும் முட்டாள்தனமும் நிலவியது ஏன் என்று அறிவதற்குக்கூட அவர் விரும்பினார். அவர் எல்லாவற்றையும் கற்றிருந்ததாக அவர் நினைக்க வில்லை.*

*துன்மார்க்கமான ஒரு பெண் உலகத்தின் மாபெரும் தீமைகளில் ஒன்றாக இருக்க முடியும் என்பது அவர் கண்டறிந்தவற்றில் ஒரு விஷயமாக உள்ளது (7:26). அவர் அவளை, "கண்ணிகளும் வலைகளுமாகிய நெஞ்சமும்" உடையவள் என்று விவரித்தார், இவள் கசப்பான மரணத்தை விட மோசமானவளாக இருப்பதாக அவர் கூறினார். தேவனுக்குப் பிரியமான வாழ்வை வாழுகின்றவர் மாத்திரமே கவர்ச்சியினால் மயக்கும் பெண்ணின் வலையில் இருந்து தப்பமுடியும். சாலொமோன் இவ்விடத்தில் அநேகமாக, விபசாரத்தின் தீமைகளைக் குறிப்பிட்டு இருக்கலாம்.*

*சாலொமோன் பல தனிநபர்களை ஒருவருக்குப்பின் ஒருவராக ஆராய்ந்தபின்பு (7:27-29), ஒரு முடிவை அடைந்தார். ஆயிரம் மனிதர்களில் ஒரு ஆண் மாத்திரமே ஞானமுள்ளவர் என்று கருதப்பட முடியும் என்பது அவரது அனுமானமாக இருந்தது. பெண்களில் (ஞானமுள்ளவளாக) அவர் அவ்வளவு பேரைக்கூடக் கண்டிருந்ததில்லை. பெண்கள் என்பவர்கள் சாலொமோனின் பலவீனங்களில் இருந்தனர். அவர் தம்மைப் புறஜாதிப் பெண்கள் வழிவிலகிச் செல்ல அனுமதித்தது பற்றி தேவன் மிகவும் பிரிய மற்றிருந்தார் (1 இராஜா. 11). அவர் சரியான வகையிலான பெண்களுடன் தொடர்பு கொண்டிருந்தால், ஞானமுள்ள அரசராகிய அவரின் முடிவானது வேறுவிதமாக இருந்திருக்கும்.*

*இந்த முடிவில் இருந்து இன்னொரு முடிவு வந்தது. எல்லா மனிதர்களை யும் நல்லவர்களாகவே தேவன் படைத்தார், ஆனால் அவர்கள் வழிவிலகிச் செல்லுவதற்குப் பல்வேறு உபாயதந்திரங்களைக் கண்டுபிடித்துக் கொண்ட னர். மனிதர்கள் தங்களைப் படைத்த தேவன் கூறுவதை மாத்திரம் கவனிக்கக் கற்றுக்கொள்ள முடியுமென்றால், அவர்கள் தங்களைத் தாங்களே மனநிறைவு அடையச் செய்து கொள்ளும் வழிகளைக் கண்டு பிடிக்கும்படி சோதிக்கப்படமாட்டார்கள்.*

*தேவனிடத்தில் இருந்து வருகிற ஞானம் மனிதரின் வாழ்வில் ஒளியூட்டுகிறது (8:1). அவன் கர்த்தரில் நம்பிக்கையாய் இருந்தால், தன்னைத்தானே திருப்திப்படுத்திக் கொள்வதற்கு வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இராது. அவனது முகம், தேவன்மீது அவனது விசுவாசத்தினாலும் உறுதிப்பாட்டினாலும் பிரகாசிக்கும். அவன் மூலமாக மற்றவர்களுக்குக் கர்த்தருடைய வனப்பு பிரகாசிக்கும்.*

## *அரசாங்க அதிகாரத்திற்குக் கீழ்ப்படியுங்கள் (8:2-17)*

*அரசரிடத்தில் இருந்து வருகிற ஒரு ஆணையானது தேவனிடத்தில் இருந்து வருகிற ஒரு வாக்குத்தத்தத்தைப் போலவே மும்முரமானதாக/ வினயமானதாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் (8:2-8). இராஜ்யத்தின் குடிமகன், தான் நியாயமற்ற வகையில் நடத்தப்பட்ட போதிலும் அதை விட்டு வெளியேறிவிடுவதில். துரிதமாயிருக்கக் கூடாது என்று சாலொமோன் அறிவுறுத்தினார். அரசர் தமக்குப் பிரியமானபடியெல்லாம் செய்வதற்கு அதிகாரம் கொண்டுள்ளார். அவரது ஆட்சிப்பகுதியில் அவரது வார்த்தையே அதிகாரம் வாய்ந்ததாக உள்ளது. எவரொருவரும் அவரைக் கேள்வி கேட்பதில்லை. அரசரின் அதிகாரத்தை மதிப்பவர்கள் தண்டிக்கப் பட மாட்டார்கள். தனது முன்னுரிமைகளைச் சரியாகக் கொண்டுள்ள ஞானமுள்ள மனிதன், அரசரைக் கனப்படுத்துவதற்கு ஒரு காலத்தையும் ஒரு வழியையும் கண்டறிவான்.*

*குடிமை அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல் என்பது கிறிஸ்தவர்களுக்கு ஒரு முன்னுரிமையாக உள்ளது. ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள், மேலான அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று பவுல் போதித்தார் (ரோம. 13:1-7). குடிமை அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியும்படி தங்களைக் கொண்டுவர முடியாதவர்கள், தங்களின் முன்னுரிமைகளை சரியாகக் கொண்டிருப்பதில்லை. தாங்குவதற்குக் கடினமாக இருக்கும் விஷயங்கள் உட்பட, ஒவ்வொன்றும் தத்தனது காலத்தையும் நோக்கத்தையும் கொண்டிருப்பதாலேயே, அரசாங்க அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியும்படி ஞானம் நம்மை வழிநடத்துகிறது என்று சாலொமோன் முடிவு செய்தார். என்ன நடக்கப் போகிறது என்பதை அறியாத நிலையில் அதிலிருந்து எந்த மனிதரும் தப்பிக்க இயலாது. அவன், தான் மரிப்பது எப்போது என்பதைக்கூட அறிந்திருப்பதில்லை. காலம் வருகின்றபோது, அவன் தனது உடலில் இருந்து தனது ஆவி பிரிந்து செல்லுவதைத் தடை செய்ய இயலாது. அது நாம் யாவரும் போரிட வேண்டிய ஒரு யுத்தமாக உள்ளது. எவரொருவரும் அதிலிருந்து விடுவிக்கப்படமாட்டார்கள். ஒரு மனிதன் மரிப்பதற்கு (இயலா நிலைகொண்ட) தாழ்நிலையை அடைவதில்லை. வாழ்வு மிகவும் குறுகியதாக உள்ளது, மரணம் மிகவும் நிச்சயமானதாக உள்ளது, மற்றும் நித்தியம் என்பது கலகத்தில் வாழ்வதற்கு மிகவும் நீண்டதாக உள்ளது.*

*இதற்கு மறுபுறத்தில், சர்வாதிகாரியாக ஆட்சிசெய்யும் அரசன் என்பது, சாலொமோன் உற்றுக் கவனித்தவற்றிலேயே மிகவும் பயனற்ற விஷயமாக இருந்தது (8:9-13). அந்த சர்வாதிகாரி மரித்தபோது, அவன் மாபெரும் ஆடம்பரத்துடன் அடக்கம் பண்ணப்பட்டான், பின்பு விரைவிலேயே மறக்கப் பட்டான். அதே விஷயத்தைச் செய்வதற்கு அவனுடைய இடத்தில் வேறொருவன் வந்தான். அவ்வகையான துன்மார்க்கத்திற்குத் தண்டனை யானது சீக்கிரமாய் நிறைவேற்றப்படாதபடியால், எவரொருவரும் கடந்த காலத்தின் அனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்ளுவதாகக் காணப்படு*

*வதில்லை. இந்த சர்வாதிகாரிகள், வரலாற்றின் பாடங்களைக் கற்றுக் கொள்ளத் தவறினார்கள் என்ற உண்மை இருந்தபோதிலும், இரு விஷயங்களில் நாம் நிச்சயமாக இருக்க முடியும்: (1) பாவியொருவன் நூறுமுறை தவறு செய்தும் சற்றுக்காலம் வாழத்தொடரலாம், ஆனால் தேவனுக்குப் பயந்த மனிதனே முடிவில் நன்றாகச் செயல்படுகின்றான் (8:12), மற்றும் (2) துன்மார்க்கன் தேவனுக்குப் பயப்படாதபடியினால், அவனது நாட்கள் நீடிக்கப்படுதல் என்பது அவனுக்கு நல்லதாயிராது (8:13).*

*நல்ல மனிதர்கள் துன்மார்க்கரைப் போலவும், துன்மார்க்கர் நல்ல மனிதரைப் போலவும் நடத்தப்படவேண்டும் என்பது சரியானதாகக் காணப்படுவதில்லை என்று சாலொமோன் ஒப்புக்கொண்டார் (8:14). ஒரு மனிதன் வாழுகையில், அவனுக்குத் தேவன் தருகின்றதான, அவனது உழைப்பின் பலனை மகிழ்வுடன் அனுபவித்தல் என்பதே ஒரு மனிதன் செய்யக்கூடிய மேன்மையான விஷயமாக உள்ளது என்று அவர் முடிவுசெய்தார். அவன் ஞானத்தைப் புரிந்து கொள்வதற்குத் தனது இருதயத்தைப் பயன்படுத்தும்போது, தேவனின்றி எதுவும் எதையும் அர்த்தப்படுத்துவதில்லை என்று உணர்ந்து அறிகின்றான். வாழ்விற்கான அர்த்தத்தை நாம் இரவும் பகலும் ஆராய்ந்து பார்த்தும், அதை ஒருக்காலும் கண்டறியாமல் இருக்கக்கூடும். தனக்குத் தெரியும் என்று நினைக்கின்ற ஞானமுள்ள மனிதர்கூட தேவனுடைய நோக்கங்கள் எல்லாவற்றையும் உண்மையிலேயே புரிந்து கொண்டிருக்கவில்லை (8:17).*

## *முடிவுரை*

*தேவனுடைய முன்னுரிமைகளைத் தேர்ந்து கொண்டவர்களே, வாழ்வைச் சரியான வகையில் திருப்பி அமைத்துள்ளவர்கள் ஆவர். சரியான முன்னுரிமைகளைக் கொண்டுள்ளவர்கள், உலகத்தில் உள்ள மற்றவர்கள் கண்களில் மதியீனராகக் காணப்படுவார்கள். சில முன்னுரிமைகள் பூமிக்குரிய கண்ணோக்கில் கருத்தறிவு எதையும் ஏற்படுத்தாது, ஆனால் தேவபக்தியுடன் இருப்பவர்கள் எது மிகவும் மேன்மையானது என்பதை அறிந்துகொள்ள தேவனை நம்பியிருக்கிறார்கள்.*